மாலை முரசு

பக்கங்கள் 19+ 02

## நாளைய ஹர்த்தால் மிகவும் அவசியம்!

**வேழமாலிகிதன் தெரிவிப்பு**



வடக்கு, கிழக்கில் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னத்தை எதிர்த்தும், இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிரா

02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை 17.08.2025 | அதிர்வு 017

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# நாளை திட்டமிட்டபடி ஹர்த்தால் போராட்டம்

## காலையில் மாத்திரம் முன்னெடுக்கப்படும்; தமிழரசின் செயலாளர் சுமந்திரன் அறிவிப்பு



(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கில் அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னம் மற்றும் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக நாளை ஹர்த்தால் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படும் எனவும், அது பலரின் நன்மை கருதி காலையில் மாத்திரம் நடைபெறும் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

02



## குமணனை இன்று ஏழு மணிநேரம் துருவியது ரி.ஐ.டி

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலை வரும் சுயாதீன ஊடகவியலாளருமான கண பதிப்பிள்ளை குமணன் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் விசார ணைக்கு அழைக்கப்பட்ட நிலையில் இன்று காலை 9.30 மணிக்கு அவர் முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் பொலிஸ் நிலையத்தில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசார ணைப் பிரிவில் விசாரணைக்காகச் சென்றார்.

அவர், சட்டத்தரணி நடராசா காண்டீபனுடன் விசாரணைக்காகச் சென்றார்.

காலை 10 மணியளவில் ஆரம்பித்த விசாரணை சுமார் ஏழு மணித்தியாலங்களாகத் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

அதன்பின்னர் சட்டத்தரணியுடன் குமணன் அங்கிருந்து வெளியேறினார்.

## ஹர்த்தாலுக்கு யாழ். முஸ்லிம்களும் ஆதரவு

“முல்லைத்தீவில் இராணுவத்தால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தமையைக் கண்டித்தும், அளவுக்கு அதிகமான இராணுவப் பிரசன்னம் மற்றும் இராணுவ அடக்குமுறை என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை நாளை திங்கட்கிழமை வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தாலுக்கு (கதவடைப்புக்கு) தமிழ் பேசும் மக்களாக ஒன்றினைந்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களும் தமது பூரண ஆதரவை மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.”

02



## ஜனநாயகப் போராளிகள் கட்சியும் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு



(கி.வசந்தன்)

“வடக்கு, கிழக்கின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் செறிவான இராணுவப் பிரசன்னம் அகற்றப்பட்டு எமது மக்களின் பாரம்பரிய வரலாற்று நிலங்கள் எமது மக்களிடமே கையளிக்கப்பட வேண்டும் என நாளை திங்கட்கிழமை ஏற்பாடாகியுள்ள முழுமையான கதவடைப்புப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவை நாம் வழங்குகின்றோம்.” – என்று ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் செயலாளர் க.துளசி வெளியிட்

02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# மகளிர் அமைப்புகளை இனங்காண நடவடிக்கை

இலங்கையில் தமிழ் மொழி மூலமாக இயங்கி வரும் மகளிர் அமைப்புகளை இனங்கண்டு அவற்றோடு தொடர்புகளை வலுப்படுத்தி தேசிய ரீதியிலான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்குப் புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணி நடவடிக்கை எடுக்கவுள்ளது என அதன் தலைவி ரஞ்சனி சுரேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“நாட்டில் தமிழ்பேசும் சமூகங்கள் வாழும் பகுதிகளில் இயங்கி வரும் மகளிர் அமைப்புகளை நாம் அறிந்து கொள்ள விரும்புகின்றோம். இவ்வாறு இயங்கி வரும் அமைப்புக்கள் தமக்குள் தொடர்பாடல்களை வலுப்படுத்துவதன் மூலம் தேசிய ரீதியிலான கட்டமைப்பை ஏற்படுத்திக்கொள்வதுடன் ஒருங்கி ணைந்த செயற்பணிகளை முன்னெடுக் கலாம் என நம்புகின்றோம்.



எனவே, இவ்வாறு இயங்கும் அமைப் புக்கள் எம்மைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் தர புதிய அலை கலை வட்ட மகளிர் அணி இலக்கம் 53, சங்கமித்த மாவத்தை, கொழும்பு -13 என்ற முகவ ரிக்குக் கடிதம் மூலமாகவும் 0754880172 என்ற வட்சப் இலக்கத்திலும் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“அரசாங்கப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராணுவப் பேச்சாளரும் பொலிஸ் பேச்சாளரும் இருந்தனர். நாளை வடக்கு, கிழக்கில் நாம் நடத்தும் ஹர்த்தால் தொடர்பிலேயே இந்த ஊடக சந்திப்பு நடைபெற்றது.

அதில் அவர்கள் விசேடமாகக் கூறிய விடயங்களுக்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அதில் அமைச்சர் கூறுகின்றார், “இது தமிழர்களுக்கு எதிரான விடயம் அல்ல. இப்படியான சம்பவம் எந்தப் பகுதியில் இடம்பெற்றாலும் நடவடிக்கை எடுக்கின்றோம். அதற்கு ஹர்த்தால் செய்ய வேண்டிய அவசியம் இல்லை” – எனச் சொல்கின்றார். ஆனால் வடக்கு, கிழக்கைப் போன்று நாட்டின் எப் பகுதியிலும் மக்கள் மத்தியில் இராணுவப் பிரசன்னம் கிடையாது. நாங்கள் இந்தக் ஹர்த்தால் மூலம் வெளிக்கொணர இருக்கும் முக்கிய விடயம் என்னவெனில் சாதாரண மக்களுடைய வாழ்க்கையில் இடையூறு செய்யும் விதமாகவே இந்த இராணுவ மயமாக்கல் இடம்பெறுகின்றது என்பதனை நாம் தொடர்ச்சியாகக் கடந்த 16 வருடங்கள் சொல்லி வருகின்றோம்.

அனுமதியின்றி சிலர் இராணுவ முகாமுக்குள் நுழைந்தார்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களை விரட்டியடிக்க நடவடிக்கை எடுத்தபோது ஒருவர் நீரில் மூழ்கி இறந்து விட்டார் என்றும், மரண விசாரணை முடியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். நீதிமன்ற நடவடிக்கை இருக்கும்போது நீரில் மூழ்கி மரணம் எனக் கூற முடியாது.

இதேநேரம் பொலிஸ் பேச்சாளரின் தகவலின்படியே ஒரு இராணுவ வீரர் இந்த ஐந்து பேரையும் தாக்கிக் காயப்படுத்தினார் என்ற காரணத்துக்காகக் கைது செய்யப்பட்டதாகவும் கூறுகின்றார். உயிரிழந்த இளைஞர் தாக்கி மரணமடைந்தாரா, தாக்கியதால் குளத்தில் பாய்ந்தாரா போன்ற விடயங்கள் எல்லாம் வெளிவர வேண்டும். இதேநேரம் ஏனைய இரு இராணுவத்தினரும் மேற்படி ஐவரையும் அழைத்து வந்தவர்கள் என்ற ரீதியில் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் சொல்கின்றார்.

அப்படியானால் இராணுவ வீரர்களே அவர்களை உள்ளே அழைத்து வந்திருந்தால் இது எப்படி அனுமதியற்ற நுழைவு எனச் சொல்ல முடியும் என ஊடகவியலாளர்களும் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்குஉரியபதில்கொடுக்கப்படவில்லை.

அமைச்சர் நாம் வேறுபாடு காட்டுவதில்லை என்கின்றார். ஆனால், நான் மீண்டும் கூறுகின்றேன். இது வடக்கு, கிழக்கில் மட்டும் காணும் விடயம். இதே நேரம் அமைச்சர் இன்னும் ஒன்றைக் கூறுகின்றார் அவர்கள் சேர்ந்து வாழப் பழகிவிட்டனர், அவர்களிடத்தில் நல்ல உறவு உள்ளது என்கின்றார். இது இராணுவமயமாக்கலின் சிறிய உதாரணம். இராணுவம் வாழும் சூழலை இராணுவத்தை அண்டி வாழும் சூழலை ஏற்படுத்துகின்றனர் என்பதனைச் சுட்டிக்காட்டி எதிர்ப்பை வெளிப்படுத்தவே இந்தக் ஹர்த்தால் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

எவருக்கும் தடங்கல் ஏற்படுத்தவோ, அவர்களைச் சிரமப்படுத்தவோ இந்தக் ஹர்த்தாலைச் செய்யவில்லை. இது தொடர்பான அரச ஊடக சந்திப்பில் இராணுவப் பேச்சாளர் ஒன்றையும், பொலிஸ் பேச்சாளர் ஒன்றையும் கூறுகின்றனர். அமைச்சர் வேறு ஒன்றைக் கூறுகின்றார் இதை வெளிப்படுத்தியே ஹர்த்தால் இடம்பெறுகின்றது என்பதனை வடக்கு, கிழக்கு மக்களுக்கும் விசேடமாக வர்த்தக உரிமையாளர்களுக்கும் எடுத்துச் சொல்ல விரும்புகின்றோம்.

இதேநேரம் பலரின் கோரிக்கையின் பெயரில் ஹர்த்தாலை முழுமையாகப் பேணும் அதேநேரம், இதைப் பலரின் நன்மை கருதி காலையுடன் மட்டும் முடித்துகொள்ளலாம். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தன் ஆலய உற்சவம் மாலையில் இடம்பெறுவதும் கருத்தில்கொள்ளப்பட்டு இந்த முடிவு எட்டப்படுகின்றது.” – என்றார்.

---

## ஜனநாயகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“வேண்டுமென்றே சில தரப்புகள் இதன் நதி மூலம் ரிசி மூலம் தேடி போராட்டங்களைக் குழப்பியடித்து இனத்தின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

அன்பான எமது உறவுகளே அதீத இராணுவப் பிரசன்னம் இன்றுவரை எமது தாயக நிலங்களில் ஏற்படுத்தி வருகின்ற இடர்பாடுகளை சந்தித்து அவற்றின் இழப்பை உணர்ந்து கொண்டவர்கள் நாங்கள். நல்லூர் திருவிழா நாட்களிலோ, மடுத்திருவிழா நாட்கள் என்பதனாலோ சிங்கள இராணுவம் எம் மீது ஷெல் தாக்குதலை நிறுத்துவதில்லை என்கின்ற வரலாற்று வலியை உங்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகின்றேன். போராட்டம் வெற்றியோ, தோல்வியோ தொடர்ந்து போராடும் மன வலிமையைத் தந்தவன் வழியில் போராடியவர்கள் நாங்கள்.

எமது மக்களின் எதிர்கால நலன்கள் கருதி தாயகத்தின் செறிவான இராணுவப் பிரசன்னம் அகற்றப்பட வேண்டி யார் அழைப்பினும் நாம் எமது ஜனநாயக ஆதரவைத் தொடர்ந்து வழங்குவோம்.” – என்றுள்ளது.

---

## ஹர்த்தாலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“வடக்கு, கிழக்கில் நிலை கொண்டுள்ள அதிகரித்த இராணுவப் பிரசன்னத்தின் மூலமாக உண்மையிலேயே மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இராணுவ மயமாக்கலை வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் நீண்ட காலமாகவே எதிர்த்து வருகின்ற நிலையில் அடக்குமுறையுடன், உயிர்ப்பலிகளும் இடம்பெறுவது மிகவும் கண்டனத்துக்குரியதாகும்.

எனவே நாளை இடம்பெறும் பூரண ஹர்த்தால் (கதவடைப்பு) நடவடிக்கையில் யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களும் தமிழ் பேசும் மக்களாகப் பங்கெடுப்பதுடன், வடக்கு, கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் – ஒற்றுமையையும் இதன் மூலம் வெளிக்காட்டுவதற்குத் திடசங்கற்பம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.” – என்றுள்ளது.

---

## நாளைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவும் தமிழர் தாயகத்தில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் போராட்டம் மிகவும் அவசியம் என்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

நாளை இடம்பெறவுள்ள ஹர்த்தால் போராட்டம் தொடர்பாக தனது நிலைப்பாட்டை ஊடகங்களுக்குத் தெரிவிக்கும்போதே வேழமாலிகிதன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

“வடக்கு, கிழக்கில் தேவையற்ற பகுதிகளில் இராணுவத்தின் பிரசன்னங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது. அரச காணிகள் மற்றும் தனியார் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வருவதன் காரணமாகப் பல்வேறு வகைகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.” – என்றார்.




# செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரி பிரிட்டனில் வெள்ளியன்று கவனவீர்ப்புப் போராட்டம்

## பிரதமரிடம் மகஜரும் கையளிப்பு

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் பிரித்தானியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அந்நாட்டுப் பிரமரிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

பிரித்தானியாப் பிரதமர் அலுவகம் முன்பாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமும், மகஜர் கையளிப்பும் இடம்பெற்றது.

இதன்போது, செம்மணி மாத்திரமல்லாது வடக்கு, கிழக்கில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி மகஜர் கையளிக்கப்பட்டது.

இதில், புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.












# கொழும்பில் சர்வதேச சகோதரிகள் தின நிகழ்வு

புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணி நடத்திய சர்வதேச சகோதரிகள் தினம் கொழும்பில் அண்மையில் நடை பெற்றது .

இதன்போது அமைப்பின் தலைவி ரஞ்சனி சுரேஷ் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அமைப்பின் ஸ்தாபகர் ராதாமேத்தா சிறார் காப்பகங்களுக்கான உடை மற்றும் அத்தியாவசியப்பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்தார். இவை மட்டக்குளியிலுள்ள மெளசேவன சிறுவர் இல்லம் மற்றும் வத்தளை கோகுலம் சிறுவர் நிலையம் என்பனவற்றுக்கு வழங்கப்பட்டன.

பிரதம நிர்வாகத்தின் தலைவர் ஷண்மு மற்றும் மகளிர் அணி செயலாளர் பிரியதர்ஷினி பாடசாலைகளுக்கான நூல்கள் வழங்கினார். இவை இரத்தினபுரி நிரியெல்லை தமிழ் வித்தியாலயம் மற்றும் பசறை சைவ பிரகாசம் தமிழ் வித்தியாலயம் என்பனவற்றுக்கு வழங்கப்பட்டன.

திருமதி ஆனந்தி குறும்படக் கதை சொல்லும் நிகழ்வில் பங்கேற்று கதை சொன்னார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிகழ்ச்சியை மகளிர் அணியின் பொருளாளர் உஷா கெனடி தொகுத்து வழங்கினார்.





















# அரசுக்கு எதிராக கந்தபளையில் நேற்று மாலையில் ஆர்ப்பாட்டம்

அரசுக்கு எதிராக சமூக நீதிக்கான மலைக வெகுஜன அமைப்பினர் கந்தபளை நகரில் நேற்று மாலை 5 மணிக்கு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கையில் பதாகைகளையும் தீப்பந்தங்களையும் ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி இக்கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மக்கள் பங்குபற்றினர்.

இதன்போது பொருள்களின் விலைகளை குறைக்கவும், தோட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவும், தோட்ட தொழிலாளர்களின் 2000 ரூபா சம்பளத்தை அதிகரித்து வழங்கவும் வலியுறுத்தப்பட்டது.

இந்திய ஒப்பந்தத்தை கிழித்தெறிய வேண்டும் எனவும், அத்தோடு மின்சாரக் கட்டணத்தை குறைக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்த னர்












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டமா அதிபர் மீது குற்றச்சாட்டு

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை தொடர்பில் நீதி முறையான விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, குற்றமிழைத்தோரைத் தண்டிப்பதில் உள்ள நெருக்கடிகள், பின்னடைவுகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இந்த தடவைக்கான அறிக்கை உள்நுழைந்து ஆராயத் தொடங்கி இருப்பதாகத் தெரிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் வரும் செப்டம்பர் அமர்வுக்காக மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்துள்ள இலங்கை தொடர்பான வரைவு அறிக்கையில் இந்த பின்னடைவுக்கான ஒரு காரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது அவர் குறை கூறியிருக்கின்றார்.

வழக்கு தொடர்வது தொடர்பாக சட்டமாஅதிபருக்குவழங்கப்பட்டுள்ள பரந்த விருப்புரிமை, உறுதிப்படுத்தப்படாத ஆதாரங்கள் மீது செயல்படுவதற்கு சட்டமா அதிபர் காட்டும் பொதுவான தயக்கம், காவல் துறையின் வரையறுக்கப்பட்ட புலனாய்வுத் திறன், தகுதி வாய்ந்த தடயவியல் நிபுணர்கள் இல்லாமை மற்றும் தமிழ்ப் பேசும் அதிகாரிகளின் பற்றாக்குறை ஆகியவை பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவதைக் கூட்டாக தடுக்கின்றன, அத்தோடு தண்டனையில் இருந்து விலக்களிக்கும் கலாசாரம் தொடர அதுவே வாய்ப்பு அளிக்கின்றது என்று ஆணையாளரின் அந்த அறிக்கை கூறுகிறது.

அதே சமயம் தற்போதைய அரசாங்கம் தனது கொள்கை அறிக்கையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விடுபட்டு, சுயாதீனமாக இயங்கும் பொது வழக்குத் தொடர் இயக்குநரகத்தை அறிமுகப்படுத்துவதற்கு உறுதியளித்துள்ளது. அதனையும் ஆணையாளர் தன் அறிக்கையில் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆக அறிக்கையின் போக்கு, இலங்கையின் அரசு இவ்விடயத்தில் கொள்கை ரீதியாக நல்ல திட்டத்தைக் கொண்டிருந்தாலும், விடயத்தை முன்னெடுப்பதில் சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற இடைஞ்சல்கள் இருக்கின்றமை போன்ற ஒரு கருத்தை தருகின்றது.

நீதியை நிலைநாட்டி, தண்டனை விலக்களிப்பைப் புறம் தள்ளுவதற்கு இலங்கைத் தரப்பில் இடைஞ்சலாக இருக்கும் தரப்புகளை ஒவ்வொன்றாக வெளிப்படுத்தினால்தான் அல்லது பொறுப்பில் இருந்து அகற்றினால்தான் நீதி நிலைநாட்டப்படுவது சாத்தியமாகும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கருதுகின்றார் போலும்.

அந்த வகையில் நீதி நிலைநாட்டப்படும் விடயத்தில் பொறுப்பில் கூட்டாக ஒன்றுபட்டு நிற்க வேண்டிய இலங்கை அரசுக் கட்டமைப்பின் பல்வேறு பிரிவுகளையும் தரப்புகளையும் பிரித்துதறி விடயத்தை கையாள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை முயற்சிக்கின்றது போல தெரிகின்றது.

முதலில் வழக்குத் தொடுக்க வேண்டிய தரப்பின் மீது - அதன் பொறுப்பற்ற தன்மையின் மீது - அதன் செயற்றிறனின்மை மீது - ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பார்வை பாய்ந்திருக்கிறது.

இப்போது சட்டமா அதிபர் திணைக்களம் தன்னை மாற்றிக் கொள்ளாவிட்டால் - அல்லது நீதியை நிலைநாட்டும் விடயத்தில் காத்திரமான பிரதிபலிப்புகளை வெளிப்படுத்தாமல் விட்டால் - குற்றச்சாட்டு விரல் அதன் மீதே நிரந்தரமாக நின்று விடும்.

ஐ.நா. ஆணையரின் வரைவு அறிக்கைக்கு பதில் கொடுக்க முற்படும் சட்டமா அதிபர் திணைக்களம், அதன் மூலமாவது இலங்கையில் உண்மை நிலை அம்பலமாவதற்கு எதிராக இடையில் நந்தியாகக் குந்தியிருக்கும் தனது இடைஞ்சல் போக்கிலிருந்து தன்னை மாற்றி, தனது சட்டப் பொறுப்பை - கடப்பாட்டை - நீதியுடன் நிறைவு செய்வதற்காகத் தன்னை முழுமையாக மாற்றிக் கொள்வதை உறுதியாக வெளிப்படுத்த வேண்டும்.




# மன்னாரில் 15 ஆவது நாளாக தொடரும் மக்கள் போராட்டம்

## பள்ளிமுனை,பெரிய கரிசல் கிராம மக்கள் இன்று பங்கேற்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனவீர்ப்பு போராட்டம் இன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை15 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஆதரவு வழங்கும் வகையில் பள்ளிமுனை மற்றும் பெரிய கரிசல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டனர்.

மேலும் மன்னாரைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களும் பங்கேற்றனர்.போராட்டத்தில் மக்கள் தலையில் கருப்பு பட்டி அணிந்து அதில் பங்குபற்றி வருகின்றனர். வருகின்றனர்.

இன்றைய போராட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்களும், மத தலைவர்களும், அருட் சகோதரிகளும் ஒன்றிணைந்துள்ளனர்.

மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இப்போராட்டம் இடம் பெற்று வருகிறது.


போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.








# சாகித்திய விருது பெற்ற "பரசுராம பூமி" சிறுகதைத் தொகுப்பு நூல் ஆங்கிலத்தில்!

(அபு அலா )

கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்ற வி.மைக்கல் கொலினின் "பரசுராம பூமி" சிறுகதைத் தொகுப்பு நூலை பிரபல எழுத்தாளர் லண்டன் மு.தயாளனின் ஆங்கில மொழிபெயர்ப்பில் "THE LAND OF PARASHURAMA" என்ற தலைப்பில் amazon இல் (12) வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

முழுமையாக தொன்மங்களையும், மறைநூல்களையும் உள்ளடக்கிய தொரு சிறுகதைத் தொகுப்பு நூலாக உள்ளதால், பலரை யும் மறு வாசிப்புக்கு உட்படுத்திய தமிழின் முதல் சிறுகதைத் தொகுப்பாக வும் இது அமைந்துள்ளது.

ஈழத்தமிழ் இலக்கியத்தில் முதன் முதலாகக் கருதப்படும் இந்த தொகுப்பு சிறுகதை நூலில், நவீன போராட்டங்களின் பார்வையில் பண்டைய கருப்பொருள்களை தைரியமாக மறு விசாரணை செய்கிறது என்று சொல்லுமளவுக்கும், புராணம் மற்றும் வரலாற்றின் காலத்தால் அழியாத அதிர்வுகளையும் சுட்டிக்காட்டுகிறது.

அதிலுள்ள ஒவ்வொரு கதையும் பழங்கால சின்னங்களுக்கு புதிய உயிரை ஊட்டுகிறது. அத்துடன் கடந்த நூற்றாண்டுகளில் இருந்ததைப் போன்றே, இன்றும் பொருத்தமான விளக்கங்களை இந்த நூல் வழங்குகிறது. அதன் குரல், மனநிலை மற்றும் தார்மீக விசாரணையைக் கொண்டுள்ளதுடன், தொகுப்பாசிரியரின் பாரம்பரியம் மற்றும் சமகால உலகம் பற்றிய ஆழமான புரிதலையே அது காட்டுகிறது.

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பல நூல்களை எழுதிய பிரபல எழுத்தாளர் லண்டன் மு.தயாளனின் "பரசுராம பூமி" சிறுகதைத் தொகுப்பு நூல் மிகச் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு ஆங்கில மொழி பெயர்ப்பில் "THE LAND OF PARASHURAMA" என்ற தலைப்பில் amazon இல் வெளியீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# புல்மோட்டை அரபாத் நகரில் வெள்ள நீர் பிரச்சினைக்கு தீர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

புல்மோட்டை அரபாத் நகரில் மழை காலங்களில் ஏற்படும் வெள்ள நீர் பிரச்சினைக்கான தீர்வு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்த்ராவின் முயற்சியால் வழங்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக மக்களைப் பெரிதும் பாதித்து வந்த அரபாத்நகர் பகுதியின் வெள்ளநீர் வடிகால் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகள் பிரதி அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டன.

அந்தப் பணிகளின் முன்னேற்றத்தை நேரில் பார்வையிட பிரதி அமைச்சர் புல்மோட்டைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அவரது இந்த வருகையின் போது குச்சவெளி பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள், குச்சவெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அவருடன் இணைந்து கொண்டனர்.



அத்துடன் புதிய வடிகால் அமைப்புகள்,நீர்த் தங்கல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால பராமரிப்பு திட்டங்கள் குறித்தும் அவர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

# நானுஓயா ரயில் நிலையத்துக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க விஜயம்



நானுஓயா ரயில் நிலையத்துக்குப் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார் .

இந்தக் கண்காணிப்பு விஜயத்தின் போது நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி, கிருஸ்ணன் கலைச்செல்வி, நானுஓயா ரயில் நிலையத்தின் பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் குறித்த ரயில் நிலையத்தில் நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டதுடன் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் அரசின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.






# மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் உயர் சேவையாளர், சாதனையாளர் கௌரவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் உயர் சேவையாளர்கள் மற்றும் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா நேற்று (16.08) அமையத்தின் தலைவர் திருமதி அம்பிகை ஜீவேஸ்வரன் தலைமையில் மூளாய் சித்தி விநாயகர் கலையரங்கில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார் மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா ராஜசீலன் ஆகியோ ரும் கௌரவ விருந்தினராக கணித ஆசிரியர் கணபதிப்பிள்ளை தளையரட்ணமும் கலந்து கொண்டனர் .



இந்த நிகழ்வில் உயர் சேவையாளர்களாக ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர், கிராம அலுவலர் நடராஜா சிவரூபன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

விளையாட்டுத் துறையில் தேசிய சாதனை படைத்தவர்களும், புலமை பரீட்சை, க. பொ. த. சாதாரணம் மற்றும் உயர்தரத்தில் அதி திறமைச் சித்தியடைந்த மாணவர்களும் அரச அதிபர் மற்றும் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மூளாய் கிராமத்தின் மக்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.











# வேலணை பிரதேச மட்டத்தில் சிறுவர் சபா கலந்துரையாடல்

வேலணை பிரதேச மட்ட சிறுவர் சபா கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவர்களின் உரிமை, பாதுகாப்பு, ஒழுக்கம், தேவைப்பாடு, ஒழுங்கற்ற வரவு , இடைவிலகல், போதை தடுப்பு, மகிழ்வூட்டும் நிகழ்வுகள் மற்றும் சமுதாயம் சார் சீர்திருத்தங்கள் பற்றியும் நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், போதைத் தடுப்பு உத்தியோகத்தர், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.









# பொத்துவில் கனகர் குடியேற்ற மக்களுக்கு விதைக் கச்சான்!

(வி.ரி.சகாதேவராஜா)

சமகால பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்ட பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கனகர் குடியேற்றக் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு ஒரு தொகுதி விதைக் கச்சான் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பால் இந்த நிகழ்வு வியாழக்கிழமை வலையமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் கனகர் கிராமத்தில் நடத்தப்பட்டது.

மீள்குடியேறிய தெரிவு செய்யப்பட்ட 60 பயனாளிகளுக்கு, ஒரு குடும்பத்துக்கு 50 கிலோ கச்சான் விதைப் பொதிகள் வீதம் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமையிலான பெண்கள் அமைப்பினர் கலந்து கொண்டு கச்சான் விதைப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

எதிர்வரும் மழை காலத்தில் விதைக்கும் வண்ணம் தற்போது உரிய காலத்தில் இந்த விதைக் கச்சான் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பிரதேச மட்டத்தில் உள்ள பிரச்சினைகளுக்கு காலம் தாழ்த்தாது உடனடித் தீர்வு வழங்குக!

## உரிய அதிகாரிகளுக்கு ஆதம்பாவா எம்.பி. பணிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் திரவியராஜின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச சபை தவிசாளர் ஏ. தர்மதாஸ், உதவி பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோத்தர்கள், முப்படையினர், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்று குறித்த அதிகாரிகளிடம் ஆராயப்பட்டது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குடி தண்ணீர் பிரச்சினை, வீதி புனரமைப்பு, யானை வேலி அமைப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. விரைவில் இதற்கான தீர்வுகள் மக்களுக்கு சென்றடைய உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.







# அரபுக் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அம்பாறையில் வாண்மை விருத்திக் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட அரபுக் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இஸ்லாம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வான்மை விருத்திக் கருத்தரங்கு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சிச் செயல் முன்னணி மற்றும் "டயகோனியா" அமைப்புக்களின் அனுசரணையில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலய ஸ்மார்ட் வகுப்பறையில் இன்று (17) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சிச் செயல் முன்னணியின் திட்ட இணைப்பாளர் ஏ.ஜீ.எம். நிசாத்தின் ஏற்பாட்டிலும், தலைமையிலும் நடைபெற்ற இந்த வாண்மை விருத்திக் கருத்தரங்கில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கணிசமான அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் இஸ்லாம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இந்த வாண்மை விருத்திக் கருத்தரங்கின் வளவாளராக பாத்திமா உயர் கல்வி நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்-ஷெய்க் கலாநிதி றவூப் செயின் கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்தினார்.

தனது விரிவுரையில் குழந்தை வளர்ப்பு, மாணவர்களின் உளவியல், கல்வி மேம்பாடு, வகுப்பறை உளவியல் உட்பட பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்தார்.





# கல்முனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் 50 லட்சம் ஒதுக்கீட்டில் சோலார் பொருத்தல்

## முன்னாள் எம்.பி. ஹரீஸின் நிதி ஒதுக்கீட்டில்

(நூருல் ஹுதா உமர்)

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் சிக்கி பல்வேறு சமூக கட்டமைப்புக்களும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளமைக்கு நிவாரணமளிக்கும் வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பி - 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அதன் ஒரு அங்கமாக கல்முனை முஹ்யித்தீன் பெரிய பள்ளிவாசலுக்கு 44 முறு திறன் கொண்ட சோலார் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்.

கல்முனை முஹ்யித்தீன் பெரிய பள்ளிவாசலின் நீண்ட நாள் பிரச்சினையாக இருந்து வந்த பெருந்தொகை மின்சார கட்டண பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விதமாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ், தனது பி - 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு 50 லட்சம் பெறுமதியான சோலார் சிஸ்டம் கல்முனை முகைதீன் பெரிய பள்ளிவாசலின் மேல்தளத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் முன்னெடுத்த இந்த சோலார் பொருத்தும் வேலைத் திட்டத்தால் பள்ளிவாசல் மாதாந்தம் இலங்கை மின்சார சபைக்கு செலுத்தி வந்த மின் பட்டியல் கட்டணம் 135,000 ஆயிரம் ரூபா இல்லாமலாக்கப்பட்டு, இந்த சோலார் மூலம் மாதாந்தம் 120,000 ஆயிரம் ரூபா பள்ளிவாசலுக்கு மேலதிகமாக வருமானமாக வருகிறது என்றும் இந்த வருமானத்தின் ஊடாக பள்ளிவாசலின் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் பள்ளிவாசல் செயலாளர் முபாறிஸ் ஹனீபா தெரிவித்தார்.




# தேசத்துக்கான நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டு - இலங்கையர் குழுமம்!

## அமைப்பின் அங்குரார்ப்பணமும் ஊடக சந்திப்பும்

(நூருல் ஹுதா உமர் )

தேசத்துக்கான நடவடிக்கை வெளிநாட்டு இலங்கையர் குழுமம் அமைப்பின் அங்குரார்ப்பணமும் அறிமுக நிகழ்வும், ஊடகவியலாளர் மாநாடும் அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி பொறியியலாளர் சாதிக் தலைமையில் நேற்று மாலை (16) சாய்ந்தமருது தனியார் விடுதியில் நடைபெற்றது.

ஏடுமுபுயுூ என அழைக்கப்படும் "வெளிநாட்டு இலங்கையர்கள்" குழு தேசத்துக்கான நடவடிக்கை என்பது, அமைதியான, வளமான, சமத்துவமான மற்றும் நீதியான இலங்கையை விரும்பும் மற்றும் வரலாற்றில் இந்த முக்கியமான கட்டத்தில் அதற்கு பங்களிக்க விரும்பும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை நிபுணர்களின் ஒரு பாரபட்சமற்ற சிவில் சமூக வலையமைப்பாகும். ஏடுமுபுயுூ நாட்டில் அதன் பல சமூக பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்தும் போது ஒரு சிந்தனைக் குழுவாகவும், தன்னார்வ நிபுணத்துவக் குழுவாகவும் செயற்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று இங்கு கருத்து வெளியிட்ட அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி பொறியியலாளர் சாதிக் தெரிவித்தார்.

மேலும், ஏடுமுபுயுூ இன் நிறுவன அமைப்பு ஒன்பது துணைக் குழுக்களைக் கொண்டுள்ளது.அவை குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதிகளைக் கையாளுகின்றன. அவை ஒரு தலைவரின் தலைமையில் உள்ளன. தலைவர்கள் குழு மற்றும் மூத்த உறுப்பினர்களைக் கொண்ட



ஆலோசனைக் குழு அனைத்தும் ஒருங்கிணைப்பாளரால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. ஒவ்வொரு துணைக் குழுவும் எட்டு உறுப்பினர்கள்வரை இருப்பர்.

தற்போது, இந்த வலையமைப்பில் சுமார் எண்பது உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் உயர் தகுதி வாய்ந்த நிபுணர்கள் (மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், கல்வியாளர்கள், விஞ்ஞானிகள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், சமூகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்றவர்கள்). உறுப்பினர்கள் அனைவரும் இங்கிலாந்து, ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டவர். உறுப்பினர்களில் ஐந்து சதவீதம் சமூக அந்தஸ்துள்ள இலங்கையைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பானது கொள்கை மற்றும் அரசியலமைப்பு விவகார துணைக்குழு, சட்டம் மற்றும் மனித உரிமைகள் விவகார துணைக்குழு, திறன் மேம்பாடு, முதலீட்டு மேம்பாடு மற்றும் ஊடக துணைக்குழு, கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதல் துணைக் குழு, பாலின விவகாரங்கள் மற்றும் சமத்துவ துணைக்குழு, சுகாதாரம் மற்றும் சமூக நல துணைக்குழு, சமூக ஆராய்ச்சி மற்றும் அறிவு பரிமாற்ற துணைக்குழு, வெளியீடுகள் மற்றும் பிரச்சார துணைக்குழு, தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை துணைக்குழு போன்ற துணைக்குழுக்களை கொண்டு நிறுவியுள்ளதாக அவர் மேலும் இங்கு கருத்து வெளியிட்டார்.

# இராணுவ பிரசன்னத்தை முற்றாக அகற்ற பொது முடக்கத்துக்கு ஆதரவு தாருங்கள்!

## வடக்குக் கிழக்கு மக்களிடம் மயூரன் வேண்டுகோள்

(பா.சதீசன்)

நாளை (18) திங்கட்கிழமை இடம்பெறவுள்ள பொது முடக்கத்துக்கு வடக்குக் கிழக்கு மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன்மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் முடிவுற்று 16 வருடங்கள் கடந்த போதும் வடக்குக் கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை. அவர்களின் பிரச்சன்னமும் குறைக்கப்படவில்லை. மாறாகப் பொது மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்த அவர்கள் அங்கு நிலையான இராணுவ கட்டுமானங்களை அமைத்தனர்.

அந்தக் காலம் தொடக்கம் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வில் இராணுவத்தின் தலையீடனாது பல்வேறு பாதிப்புக்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது. அவ்வாறான ஒரு சம்பவமே கடந்தவாரம் முல்லைத்தீவு முத்தையன் கட்டுபகுதியிலும் இடம்பெற்றுள்ளது.



தமிழர்தாயக பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி மக்களின் சுதந்திரமான வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டிய நிலைமையை ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசுகள் சிறிதளவேனும் செய்யவில்லை.

தொடர்ச்சியாகஅதிகாரவர்க்கமானது தமிழ் மக்களை அடிமை மனோநிலையில் நடத்துகின்ற இந்த நிலைக்கு வடக்குக் கிழக்கு மக்கள் தமது பூரண எதிர்ப்பைக் காட்டவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

அந்தவகையில் தமிழர்தாயக பகுதிகளில் இடம்பெறும் அதிகாரவர்க்கத்தின் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிராக நாளை திங்கட்கிழமை (18) இடம்பெறவுள்ள பொது முடக்கத்துக்கு வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள், தங்களது பூரண ஒத்துழைப்பை நல்கி சர்வதேச சமூகத்துக்கும்,அரசுக்கும் எமது நிலைப்பாட்டை உறுதிபட வெளிப்படுத்த வேண்டும்.- என்றுள்ளது.





# திருகோணமலை அபிவிருத்தித் திட்டம் குறித்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டமானது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா மற்றும் மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, தகவல் தொடர்பாடல், வனப்பாதுகாப்பு, சிறு வணிகங்கள், வனவிலங்குகள், தொல்பொருள், சமுர்த்தி போன்ற துறைகளை உள்ளடக்கி பல்வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் கீழ் மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்யப்பட்டது.

எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்துக்கும் தற்போதுள்ள பிரச்சினைகள் அல்லது சட்ட சூழ்நிலைகள் குறித்த தகவல்களைத் எனக்கு வழங்குமாறு இதன்போது பிரதி அமைச்சர் அதிகாரிகளிடம் தெரிவித்தார். அமைச்சு மட்டத்தில் தேவையான தீர்வுகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலும் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என். கோவிந்தராஜன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்குமாறு காரைதீவு பிரதேச சபை அழைப்பு

(நூருல் ஹுதா உமர் )

காரைதீவு பிரதேச சபையின் இரண்டாவது அமர்வானது பிரதேச சபையின் தவிசாளர் சு.பாஸ்கரன் தலைமையில் சபை உறுப்பினர்களுடனும் இடம் பெற்றது.

இறை வணக்கத்தைத் தொடர்ந்து தமிழில் ஒலிபரப்பப்பட்ட தேசிய கீதத்துடனும் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமர்வில் தவிசாளர் இதன் போது கருத்து கூறுகையில்,

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு அநீதி இளைக்கப்படுகிறது. இவ்வாறான இராணுவத்தினரின் மிலேச்ச தனமான செயல்களை வன்மையாக கண்டித்து இந் நல்லாட்சி அரசில் நீதியான தீர்வு வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவ்வாறான கெடுபிடிகளுக்கு எதிராக எமது தமிழரசு கட்சியினரால் நாளை 18 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு இந்தச் சபையின் எம்முடன் இணைந்து பயணிக்கும் கட்சியினரும் ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.- என்



றார்.

காரைதீவின் பொது மக்கள் சார்பாகவும் கட்சியினரின் முன்னெடுப்புக்கு அமைவாகக் ஹர்த்தால் நிகழ்வுக்குப் பூரணமான ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# காட்டு யானைகளால் உடைக்கப்பட்ட அக்கரைப்பற்று பாடசாலை மதில்!

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதியில் இன்று (17) அதிகாலை காட்டு யானைகள் சில உட்புகுந்து சேதங்களை உண்டு பண்ணியுள்ளன.

அதிகாலை 4 மணியளவில் பாடசாலையினுள் உட்புகுந்த இந்தக் காட்டு யானைகள் பாடசாலையின் சுற்று மதிலின் சில பகுதிகளையும், பயன்தரும் மரங்களையும் சேதமாக்கியுள்ளன. பாடசாலையை அண்டிய பகுகளில் இருந்த சில மக்கள் குடியிருப்பு உடைமைகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

பாடசாலையின் சுற்று மதிலை நான்கு இடங்களில் உடைத்துக் கொண்டு பாடசாலையினுள் நுழைத்த இந்தக் காட்டு யானைகள் பயன்தரும் மரங்கள் சிலவற்றுக்குச் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. சில உடைமைகளையும் நாசப்படுத்தியுள்ளன என்று அதிபர் ஏ.எல்.நசீபா தெரிவித்தார்.

நெல்அறுவடைநிறைவடைந்தவுடன் அக்கரைப்பற்று தேசிய பாடசாலையை அண்டிய பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பது வழமை. பாடசலையின் உடைமைகளுக்கும் காட்டு யானைகளால் பல தடவைகள் சேதப்படுத்தப்பட்டன. இதனால் தாம் தொடர்ச்சியாக இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் இதனை பல முறை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித தீர்வும் கிட்டவில்லை எனவும் அதிபர் ஏ.எல்.நசீபா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலையினை அண்டிய மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த இக்காட்டு யானைகள் வீடுகள், சுற்றுமதில்கள், கால்நடை பராமரிப்புக் கொட்டில்கள், கால்நடை உணவுப் பொருள்கள், பயன்தரும் மரங்கள் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் போன்றவற்றுக்கும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளன என்று பிரதேச மக்கள் கவலை தெரிக்கின்றனர்.





# அமெரிக்காவின் வரிவிதிப்பால் தமிழகத்தில் 30 லட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம்

## பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்




"அமெரிக்காவின் வரிவிதிப்பு நடவடிக்கையால் தமிழக உற்பத்தி துறை கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. இந்த இக்கட்டான சூழ்நிலையை சமாளிக்கவும், வர்த்தகத்தை மீட்கவும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

"இந்தியா – அமெரிக்கா இடையே, இரு நாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கு மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை பாராட்டுகிறேன். தேசிய நலன்களை பாதுகாப்பதற்கான மத்திய அரசின் நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிக்கிறேன். அதேநேரம், அமெரிக்காவின் 25 சதவீத வரிவிதிப்பு மற்றும் அதன் தொடர்ச்சியாக 50 சதவீதமாக வரி அதிகரிப்பு காரணமாக கடும் தாக்கங்களை எதிர்கொள்வதால், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கவலை அளிக்கும் பிரச்சினை குறித்து தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

கடந்த நிதி ஆண்டில், இந்தியாவின் மொத்த ஏற்றுமதியான 433.6 பில்லியன் டொலர் மதிப்பிலான பொருள்களில் 20 சதவீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், தமிழகத்தின் 52.1 பில்லியன் டொலர் பொருள்களில் 31 சதவீதம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகியுள்ளது. இவ்வாறு அமெரிக்க சந்தையை தமிழகம் அதிகமாக சார்ந்துள்ளதால், இந்தியாவில் மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் இந்த இறக்குமதி வரியின் தாக்கம் அதிகமாக இருக்கும். இது தமிழக உற்பத்தி துறை, வேலைவாய்ப்பில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த வரி விதிப்பால், ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல், நகைகள் – ரத்தினக் கற்கள், தோல், காலணிகள், கடல் பொருள்கள், இரசாயனம் ஆகிய துறைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த துறைகள் அனைத்தும் அதிக தொழிலாளர்களை சார்ந்தவை என்பது இன்னும் கவலைக்குரியது. இதில் எந்த ஒரு ஏற்றுமதி மந்த நிலையும் விரைவாக பெருமளவிலான பணி இழப்புகளுக்கு வழிவகுக்கும். கடந்த 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழகம் 28 சதவீதம் அளவுக்கு பங்களித்தது. இது நாட்டின் மற்ற மாநிலங்களைவிட மிகவும் அதிகம்.

குறிப்பாக, தமிழகத்தில் ஜவுளித் துறை 75 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. இந்த சூழலில், தற்போது 25 சதவீத வரி மற்றும் முன்மொழியப்பட்டுள்ள 50 சதவீத வரியின் காரணமாக, 30 லட்சம் பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. இந்த நெருக்கடியை தணிக்க, நமது ஏற்றுமதி போட்டித் தன்மைக்கு நீண்டகாலமாக தடையாக உள்ள கட்டமைப்பு சிக்கல்களை தீர்ப்பது அவசியம். இதுதொடர்பாக, பாதிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த தொழில் அமைப்புகளுடன் விரிவாக ஆலோசனை நடத்தினேன். அதன் அடிப்படையில், ஜவுளித் துறைக்கு இரண்டு அம்சங்களில், அதாவது, மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மதிப்பு சங்கிலிக்கான ஜி.எஸ்.டி. விகிதங்களில் உள்ள முரண்பாடுகளை நீக்கி, தலைகீழ் வரி கட்டமைப்பை சரிசெய்ய வேண்டும். முழு சங்கிலியையும் 5 சதவீத ஜி.எஸ்.டி அடுக்குக்குள் கொண்டு வருவது மற்றும் அனைத்து வகையான பருத்திக்கும் இறக்குமதி வரியில் இருந்து விலக்கு அளிப்பது ஆகியவற்றில் துரித நடவடிக்கை தேவைப்படுகிறது.

மேலும், அவசர கடன் வரி உத்தரவாத திட்டத்தின்கீழ் 30 சதவீதம் பிணையில்லா கடன்களை 5 சதவீத வட்டி மானியம் மற்றும் அசலை திருப்பி செலுத்துவதில் 2 ஆண்டு தற்காலிக தடையுடன் நீட்டித்தல், ஏற்றுமதி பொருள்கள் மீதான தீர்வைகள், வரிகளை நீக்குதல் திட்டத்தின் பயன்களை 5 சதவீதமாக உயர்த்துதல், நூல் உட்பட அனைத்து ஜவுளிப் பொருள் ஏற்றுமதிக்கும் முன் மற்றும் பின்கடனை நீட்டித்தல் ஆகியவை நமது ஏற்றுமதி போட்டித் தன்மையை வலுப்படுத்துவதற்கான பிற முக்கியமான காரணிகளாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

உலகளாவிய வர்த்தகத்தில் சுங்கவரி தாக்கங்கள், போட்டி அழுத்தங்கள் காரணமாக, மற்ற துறைகளும் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்கின்றன. அதற்கு உடனடி நிவாரணம் வழங்கி, பணப் புழக்கத்தை மேம்படுத்தவும், செலவுச் சுமைகளைக் குறைக்கவும் சுங்க வரிகளால் பாதிக்கப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களுக்கும் சிறப்பு வட்டி மானியத் திட்டம் அறிமுகம், அதிக சுங்க வரி சந்தை அபாயங்களை ஈடுகட்ட, தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்களை விரைவுபடுத்துதல் ஆகியவற்றை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# சாதி தான் எனது முதல் எதிரி; நடிகர் கமல்ஹாசன் தெரிவிப்பு



சாதியதடைகள்நீக்கப்பட்டபின்புதான், நாம் ஒரே தேசமாக, ஒரே மக்களாக இணைய முடியும் என்று திருமாவளவன் பிறந்த நாள் விழாவில் மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனின் 63 ஆவது பிறந்த நாளை யொட்டி. சென்னை, காமராஜர் அரங்கில் நேற்று மதச் சார்பின்மை காப்போம் என்னும் கருப்பொருளை மையப்படுத்தி சிறப்பு நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, மதச்சார்பின்மை காப்போம் தலைப் பில் கவியரங்கம் நடைபெற்றது. இதில், இயக்குநர்கே.பாக்யராஜ், கவிஞர் விவேகா, ஆண்டாள் பிரியதர்ஷினி, இளைய கம்பன், தஞ்சை இனியன், அருண் பாரதி, லாவரதன், புனித ஜோதி ஆகியோர் பங்கேற்றனர். பின்னர். மதச்சார்பின்மை காப்போம் தலைப்பிலேயே ஊடக அரங்கமும் நடைபெற்றது.

இதையடுத்து, இரவு நடை பெற்ற வாழ்த்தரங்கில், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல் ஹாசன் எம்.பி. தமிழ்நாடு பாடநூல் ச் நிறுவனத் தலைவர் ஐ.லியோனி,ஓய்வுபெற்றஐபிஎஸ்அதிகாரி வே.வனிதா, திரைப்பட இயக்குநர் லட்சுமி ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வில் கமல்ஹாசன் உரையாற்றுகையில்,

"திருமாவளவனின் 40 ஆண்டு கால அரசியல் வாழ்வு என்பது சாதாரணமானதல்ல. சாதி பிரிவினைகள் தான் இந்தியாவின் பலவீனம். சாதிய தடைகள் நீக்கப்பட்ட பின்பு தான், நாம் ஒரே தேசமாக, ஒரே மக்களாக இணைய முடியும். ஒடுக்கப்பட்ட மக்களை அரசியல் மயப்படுத்துவது என்பது எளிதல்ல. அப்படி அரசியல் மயப்படுத்துபவர்கள் அனைவருமே ஆச்சரியத்துக்குரியவர்கள். அற்புதமான மனிதர்கள். அடிக்கடி வரமாட்டார்கள்.

எனவே, திருமாவளவனை பயன்படுத்திக் கொள்ளுங்கள். அரசியல் வேண்டுமா, ஆதாயம் வேண்டுமா என கேட்டால் திருமாவளவன் அரசியலைத் தான் தேர்ந்தெடுக்கிறார். அவரைக் கண்டு நான் வியக்கிறேன்.

கட்சியை வளர்ப்பது எத்தனை கஷ்டம்என்பது கட்சிஆரம்பித்த எனக்குத்தெரியும். ஆனால், அவர் 40 ஆண்டுகளுக்கு முன்பேசெய்து விட்டார். என் சாதியை சொல்லி என்னை கிண்டல் செய்வார்கள். சாதி தான் என் முதல் எதிரி. திருமாவளவன் உருவெடுத்த பிறகுதான், ஒடுக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்கு உண்மையான விடுதலைகிடைப்பதாக நான் நினைக்கிறேன். எல்லா வகையான அடக்குமுறைக்கும், ஒடுக்கு முறைக்கும் எதிர்த்து போராடுபவன் ஜனநாயக போராளி. திராவிடம் என்பது எல்லோரையும் சேர்த்தது தான். சிந்து நதி முதல் வைகை நதி வரை பரவி உள்ளது." என்றார்.



## ஸ்பெயினில் காட்டுத் தீ;

# ஒன்றரை லட்சம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசம்

ஸ்பெயினில் பரவிவரும் காட்டுத் தீயையடுத்து ஒன்றரை லட்சம் ஏக்கர் வனப் பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

காலநிலை மாற்றத்தால் உலகின் சராசரி வெப்பநிலை பல மடங்கு உயர்வடைந்துள்ளது.

இதனால் வறட்சியான காலநிலை காரணமாக அடிக்கடி காட்டுத்தீ ஏற்படுகிறது.

இந்நிலையில், ஸ்பெயினின் மேற்கு பிராந்தியமான கலீசியா, காஸ்டில் உள்ளிட்ட 14 இடங்களில் காட்டுத்தீ பரவியது.

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக பரவும் இந்த காட்டுத் தீயில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் ஒன்றரை லட்சம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.


இதேவேளை, ஹெலிக்கொப்டர் மூலம் காட்டுத் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.











# பாகிஸ்தானில் மழை காரணமாக 344 பேர் பலி, 74 வீடுகள் சேதம்

பாகிஸ்தானில் பெய்த கனமழை, பெருவெள்ளம் காரணமாக 344 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள மாகாணமான கைபர் பக்துன்கவா மாகாணத்தில் ஏற்பட்ட கனமழை, பெருவெள்ளம் காரணமாக அங்கு இதுவரை 307 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிய வந்துள்ளது. மேலும் சில மாகாணங்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர்.


இந்த மழையால் கைபர் பக்துன்கவா மாகாணத்திலுள்ள புனர் மாவட்டம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. 74 வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன.

இதையடுத்து பாகிஸ்தானில் மழை, பெருவெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 344- ஆக உயர்ந்துள்ளது. இதைத் தொடர்ந்து அங்கு மீட்புப் பணியில் 2,000 பேர் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து கைபர் பக்துன்கவா மீட்பு ஏஜென்சியின் செய்தித் தொடர்பாளர் அகமது ஃபைசி கூறும்போது,

“கனமழை, பல இடங்களில் நிலச்சரிவு, சாலைகள் அடித்து செல்லப்படுதல் போன்ற காரணங்களால் அப்பகுதிகளுக்கு அம்புலன்ஸை எடுத்துச் செல்லுதல், நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளுக்கு வால் ஏற்பட்டுள்ளது. சாலைகள் மூடப்பட்டுள்ளதால் அங்கு மீட்புப் பணியாளர்கள் கால்நடையாக நடந்து சென்று பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.” என்றார்.

# இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் 6 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கம்




இந்தோனேசியாவின் சுலவேசி தீவில் நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது.

6 மெக்னிடியூட் அளவில் இந்த நிலஅதிர்வு பதிவாகியுள்ளது.

சுமார் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலஅதிர்வு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.


சேத விபரங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

பக்கங்கள் 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 17/08/2025

## கனடாவிற்கு சுற்றுலா வந்த பெண்ணுக்கு குழந்தை பிறந்தது



கனடாவிற்கு சுற்றுலா 02

# வாராந்தம் லொத்தர் சீட்டு கொள்வனவு செய்த தம்பதி ஒன்றுக்கு 34 மில்லியன் டொலர் வெற்றி




கனடாவில் வாராந்தம் லொத்தர் சீட்டு கொள்வனவு செய்து வந்த தம்பதியினர் 34 மில்லியன் டொலர் பணப் பரிசு வென்றுள்ளனர்.

ஒன்டாரியோவின் கேஷ் பேயைச் சேர்ந்த தம்பதியர் ஜோ மற்றும் லீஸ் மெனார்ட் ஆகியோர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் லொத்தர் சீட்டு கொள்வனவு செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இந்த தம்பதியினர் ஹோட்டலில் இரவு உணவு உட்கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

02

# கனடாவில் ஜூலையில் வீடு விற்பனை அதிகரிப்பு







கனடாவில் கடந்த 2025 ஜூலையில் வீடு விற்பனையானது கடந்த ஆண்டை விட 6.6 வீதம் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயமானது கனடிய வீட்டு மனை ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த மாதங்களில் மந்தமாக இருந்த வீட்டுச் சந்தை மீண்டும் உயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலையில் மொத்தம் 45,973 வீடுகள் விற்கப்பட்டுள்ளதுடன் இது 2024 ஜூலையில் 43,122 ஆக காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் விற்பனையானது 3.8 வீதம் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் தொடர்ச்சியாக நான்காவது மாதமாக வீடு விற்பனை அதிகரிப்பினை பதிவு செய்துள்ளதுடன் ரொரண்டோவில் வீட்டு விற்பனையானது 33.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# எயார் கனடா நிறுவனத்தின் விமான சேவை ஸ்தம்பிதம்

கனடாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான எயார் கனடா நிறுவனத்தின் விமான போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் சுமார் பத்தாயிரம் விமானப் பணியாளர்கள் நேற்று அதிகாலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக அனைத்து விமான சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான சேவை நிறுவனத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு எட்டப்படாததால் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உலகளவில் ஆயிரக்கணக்கான பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு எட்டப்படாத காரணத்தினால் தொடங்கியதாக கனேடிய பொது ஊழியர் தொழிற்சங்கத்தின் பேச்சாளர் ஹக் பவுலியோட், தெரிவித்துள்ளார்.

இதனால் விமான சேவை நிறுவனம் தனது விமானப் போக்குவரத்து சேவைகளை நிறுத்துவதாக அறிவித்தது.

அதே நேரத்தில் எயார் கனடா, பணியாளர்களை விமான நிலையங்களில் இருந்து தடுக்கும் 'லாக்அவுட்' உத்தியை அறிவித்தது.

இந்த நிறுத்தம் நாளாந்தம் 130,000 பயணிகளை பாதிக்கும், இதில் 25,000 கனடியர்கள் வெளிநாடுகளில் பாதிக்கப்படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.






## கனடாவிற்கு சுற்றுலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்த பெண் ஒருவர் குழந்தையை பிரசவித்துள்ளார்.

இங்கிலாந்தை சேர்ந்தவர் மைக்கேல் க்ரீன். இவரது மனைவி ஹெலன். இவர்களுக்கு 6 வயதில் டார்சி என்ற பெண் குழந்தை உள்ளது.

மைக்கேல் க்ரீன் தனது குடும்பத்துடன் 10 நாள் சுற்றுப் பயணமாக கனடா சென்றுள்ளார்.

டோரான்டோவில் தங்கியிருந்தபோது ஹெலனுக்கு சற்று வயிறு வலித்துள்ளது. இதனால் கழிவறைக்கு சென்றுள்ளார். திடீரென வயிற்றில் இருந்து வெளியே ஏதோ ஒன்று தள்ளுவது போன்று உணர்ந்துள்ளார். அப்போது கீழே பார்த்தபோதுதான், அவரது வயற்றில் இருந்து குழந்தை பிறந்துள்ளது தெரிய வந்துள்ளது.

ஹெலன், தான் கர்ப்பிணியாக இருப்பதாக உணர்ந்ததே இல்லை, அதற்கான அறிகுறி ஏதும் தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார். இந்த வகையான கர்ப்பத்திற்கு cryptic pregnancy ஆகும்.

அவருக்கு வழக்கமாக வரக்கூடிய மாதவிடாயில் எந்த மாறுபாடும் ஏற்படவில்லை. அப்படி இருந்தும் குழந்தை பிறந்துள்ளது. என்றாலும், தற்போது தங்களது குடும்பத்தில் கூடுதலான ஒரு பெண் குழந்தை இணைந்துள்ளதால் மகிழ்ச்சியாக உள்ளனர்.

## வாராந்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருமணமாகி 36 வருடங்கள் கடந்துள்ள இந்த தம்பதியர், வாரம்தோறும் வெள்ளிக்கிழமை இரவு லொத்தர் சீட்டு கொள்வனவு செய்து வந்துள்ளனர்.

கடந்த ஜுன் 21ம் திகதி இந்த தம்பதியினர் கொள்வனவு செய்த லாட்டோ 6ஃ49 கோல்ட் பால் லொத்தர் சீட்டு மூலம் 34 மில்லியன் டொலர் பணப்பரிசு கிடைக்கப்பெற்றுள்ளது.

லொத்தர் சீட்டு மூலம் கிடைக்கப் பெற்ற பணத்தைக்கொண்டு குடும்பத்தினருக்கு உதவ உள்ளதாகவும் தங்களது கனவு இல்லத்தை உருவாக்க உள்ளதாகவும் இந்த தம்பதியினர் தெரிவித்துள்ளனர்.